2010 நவம்பர் 11] [திரு. சு. குணசேகரன்]

அதே சமயத்தில் மற்ற பகுதிகளில் சராசரியாக இந்த ஆண்டில் 2,000 கிலோ மகசூல் கிடைத்த பகுதிக்கு 20 சதவிகிதம் இழப்பீட்டுத் தொகை கிடைத்திருக்கிறது. எனவே, கூடுதலாக விளைந்திருக்கிற பகுதிகளுக்கு இழப்பீட்டுத் தொகை கிடைத்தும், மகசூலே இல்லாத பகுதிகளுக்கு இழப்பீட்டுத் தொகை இல்லாத நிலைக்குக் காரணம், அவர்கள் அந்த 3 ஆண்டுகள் என்று கணக்கிடுகிற அந்த ஒப்பீட்டு மகசூல் ஆகும். இது ஆண்டுக்காண்டு வித்தியாசப்படுவதும், விளையாத ஆண்டில் அதைச் சேர்க்கிற காரணத்தால்தான் இப்படிப்பட்ட ஒரு தவறு ஏற்படுகிறது. எனவே, நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இப்போதே இதில் தலையிட்டு இந்தக் கணக்கீட்டு முறையில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வரவேண்டும். அதிகபட்சமாக ஒவ்வொரு ஃபிர்காக்களிலும் எந்த அளவுக்கு அதிகபட்சமான மகசூல் கடந்த ஆண்டுகளில் கிடைத்திருக்கிறதோ அதை ஒப்பீட்டு அளவீடாக வைத்துக்கொண்டு இந்த ஆண்டு விளைந்த சராசரி மகசூலைக் கணக்கிட்டால் கண்டிப்பாக இந்தப் பகுதிகளுக்கு இழப்பீடு கிடைக்கும். எனவே, நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இந்த விஷயத்தில் தலையிட்டு மகசூல் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு முறையான இழப்பீடு கிடைப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

இன்னொரு வேண்டுகோள்: சிவகங்கை தலைநகரத்தில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தின்கீழ், குழாய்கள் அமைக்கிற பணி நிறைவு பெற்றிருக்கிறது. ஆனாலும், சாலைகளைச் சீர் செய்கிற பணியை இன்னும் தொடங்காத காரணத்தால், நிதியொதுக்கீடு செய்யப்படாத காரணத்தால், மழைக்காலங்களில் மிகுந்த பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. குணசேகரன், debate-ல் பேசுகிற மாதிரி பேசுவதற்கு வாய்ப்பு கிடையாது, உட்காருங்கள். (குறுக்கீடு) முடியாது. இனிமேல் அவ்வளவுதான். (குறுக்கீடு)

(உ) உறுப்பினர்கள் கோரும் தகவல் குறித்து அமைச்சர்களுக்கு முன்கூட்டியே தெரிவித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களிடத்திலே நான் ஒன்றைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இது என்ன முறை? ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு குறை இருக்கும். அந்தக் குறையை அவர்கள் சொல்கிறார்கள். அமைச்சர்கள் வரிசையிலே பேசாமல் உட்கார்ந்து இருக்கிறோம். காரணம், அவர்கள் என்ன பேசப் போகிறார்கள் என்பது அமைச்சர்களுக்குத் தெரிந்தால்தான் பதில் அளிக்க முடியும். ஆனால், இவ்வளவு குறைகளுக்கும் அமைச்சர்கள் பக்கத்திலிருந்து பதில் வரவில்லை என்றல்லவா செய்தி வெளியே போகும். (குறுக்கீடுகள்) கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருந்தால் அதை எடுத்துக்கொள்ள வேண்டும். அது அமைச்சருக்கு வர வேண்டும். அமைச்சர் பதில் சொல்லத் தயாராக இருந்தால்தான் கவன ஈர்ப்பை எடுக்க முடியும். நீங்கள் சொல்கிற குறைகளை நான் தவறு என்று சொல்லவில்லை. ஒவ்வொரு உறுப்பினரும் நியாயமான குறைபாடுகளைக் கிளப்புகிறீர்கள்; கிளப்ப வேண்டிய உரிமை அது. ஆனால், அதை உறுப்பினர்கள் மட்டும் சொல்லிக்கொண்டு போகக்கூடாது. அதற்குப் பரிகாரம் Treasury Bench-லிருந்து வர வேண்டும். இப்போது நியாயமாக அவர் கேட்டார், நீங்களும் கேட்டீர்கள். இதைப் பற்றி எங்களுக்கு விஷயம் ஏற்கெனவே தெரிந்திருந்தால்தானே நாங்கள் பதில் அளிக்க முடியும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவ்வளவுதான். Time over. (குறுக்கீடுகள்) No. முடிந்தது, எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

2. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

(ஆ) கரும்பு, பால் கொள்முதல் விலையை உயர்த்தப் போராடிய விவசாயிகள் கைது—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பால் கொள்முதல் விலையை உயர்த்தவும், கரும்புக்கு டன் ஒன்றுக்கு 3 ஆயிரம் ரூபாய் வழங்க வலியுறுத்தியும் போராடிய தமிழக விவசாயிகள் சங்க விவசாயிகளை 10-11-2010 அன்று காவல் துறையினர் கைது செய்துள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. டி. ஜெயக்குமார், திரு. கே.பி. அன்பழகன், திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி,

சத்யமேவ ஜெயதே TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்